பாதுகாவலன்

PATHUKAVALAN

விநியோகநிலை 4-16

இளவாலை	375
அச்சுவேலி	315
நாவாந்துறை	300
கரம்பொன்	295
பேசாலை	250
மன்னார் பேராலயம்	222
மாதகல்	212
வங்காலை	210
பருத்தித்துறை	208
மானிப்பாய்	205
பாண்டியன்தாழ்வு	201
மண்டைதீவு	181
நாரந்தனை	171

மலர்: 116 இதழ் : 8 9-3-1990 (மார்ச். 9 — மார்ச் 16) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு விலை ரூபா 2/=

★ குருக்களிடையே ஒற்றுமை இருக்கவேண்டும் - திருத்தந்தை

குருக்கள் திருப்பணி ஆற்றும்போது சொந்த நலன் தலைதூக்கக் கூடாது

பெப்ரவரி 25ஆம் திகதி திருத்தந்தை 2ஆம் அருள்சின்னப்பர் வத்திக்கானில் மூவேளை செபவுரையில் ஒக்ரோபரில் நடைபெறவுள்ள ஆயர் பேரவையின் கருப்பொருளை விளக்கினார். குருக்களிடையே இருக்க வேண்டிய ஒற்றுமைபற்றிக் குறிப்பிட்ட திருத்தந்தை குருக்கள் திருப்பணி ஆற்றும் போது அவர்களின் சொந்த நலன் தலைதூக்கக்கூடாது என்றார்.

"குருக்கள் கிறிஸ்துவின் அன்புக்கு சாட்சிகளாகத் திகழ வேண்டும். இவ்வன்பு குருகுலத்தோர் மத்தியில் நல்லதொரு உறவில் வெளிப்படுத்தப்படவேண்டும்" என்று சென்ற பெப்ரவரி 25 ஆம் திகதி வத்திக்கானில் தமது செபவுரையின்போது திருத்தந்தை 2ஆம் அருள்சின்னப்பர் அறிவுரை வழங்கினார்.

ஆயர் பேரவையின் கருப்பொருளை விளக்கிய திருத்தந்தை, "குருத்துவ திருநிலைப்பாட்டைப் பெறும் எல்லோரும் இணைந்து, ஒன்றிப்பு உணர்வுடன் திருப்பணியை ஆற்றவேண்டும்" என்றார்.

"குருத்துவத்துக்கு அர்ப்பணித்திருக்கும் குருக்கள், தங்களுக்குள்ளே பிணைக்கப்பட்டுள்ளார்கள்" என்ற திருத்தந்தை, குருக்கள் ஒருவர் மற்றவருக்குச் செய்யும் உதவி, குருத்துவப்பணியை நிறைவாக்குகிறது, என்றும், குருக்களின் திருப்பணியில் சொந்த நலன் தலைதூக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார். முழு உரையும் பக்கம் இரண்டில் பிரசுரிக்கப்படுகின்றது.

கிறிஸ்தவ குழுக்கள் ஆபத்தானவை கத்தோலிக்கருக்கு பேராயர் எச்சரிக்கை

"மறைநூலில் உள்ள இறைவாக்கு எதுவும் அவனவன் தரும் விளக்கத்துக்கு உட்படக் கூடியதன்று" (2 இரா. 1:20) என்ற மேற்கோளை ஆதாரம் காட்டி கேரளாவின் சங்கனாச்சேரி மறைமாவட்ட பேராயர் சென்ற 18ஆம் திகதி எல்லாப் பங்குகளிலும் வாசிப்பதற்காக அனுப்பிய திருமுகத்தில் அடிப்படைவாத கிறிஸ்தவ சபைகளின் தான்தோன்றித் தனமான வேதாகம விளக்கங்களை எச்சரித்துள்ளார்.

பேராயர் மார் யோசப் பொவத்தில் ஆண்டகை, "புதிதாகத் தோன்றியுள்ள பல கிறிஸ்தவ குழுக்கள் தாம் விரும்பியபடி வேதாகமத்துக்கு விளக்கம் கொடுக்க முற்படும்போது திருச்சபையின் பாரம்பரியத்தையும், படிப்பினையையும் புறக்கணிக்கும் ஆபத்து உள்ளது. இவர்கள் மட்டில் கத்தோலிக்கர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் மத்தேயு 12:25 இல் யேசு செய்த அனைத்தையும் வேதாகமத்தில் அடக்கிவிட முடியாது என கூறப்பட்டுள்ளது" என்றார்.

முழுமனித முன்னேற்றத்தில் வாழ்வுதயம்

வாழ்வுதயம் தன் கிளை உறுப்பினருக்கான மூன்று நாட் கருத்தரங்கை மன்னார் திருமறைப்பணி நிலையத்தில் நடத்தியது. வாழ்வுதய இயக்குனர் அருட்திரு. ஒல்பன் இராஜசிங்கம், திருமறைப்பணி நிலைய இயக்குனர் அருட்திரு. நவரெட்னம் வடகிழக்குக்கான 'செடெக்' பொறுப்பாளர் திரு. R. C. மரியரெட்னம் ஆகியோர் விளக்கேற்றி கருத்தரங்கைத் தொடக்கி வைத்தனர்.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்.)

குடியாட்சிக்கு சார்பாக பத்திரிகை

பிலிப்பீன்ஸ் இல் கடந்த மூன்று ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்ட செய்தித்தாளான 'வெரித்தாஸ்'(Veritas) கற்பொழுது மீண்டும் வெளி

மணிலாப் பேராயர் கருதினால் சின்னின் முயற்சியினால் தொடக்கப்பட்ட வார இதழான 'வெரித்தாஸ்'ஐ வாங்குவோர் எண்ணிக்கை 87ஆயி

புதிதாக ஒரு வேதாகம வகுப்பு

பேராயர் மார் யோசப் பொவத்தில் ஆண்டகை, "புதிதாக தோன்றியுள்ள பல கிறிஸ்தவ குழுக்கள் தாம் விரும்பியபடி வேதாகமத்துக்கு விளக்கம் கொடுக்க முற்படும்போது திருச்சபையின் பாரம் பரியத்தையும், படிப்பினையையும் புறக்கணிக்கும் ஆபத்து உள்ளது. இவர்கள் மட்டில் கத்தோலிக்கர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் மத்தேயு 12:25 இல் யேசு செய்த அனைத்தையும் வேதாகமத்தில் அடக்கி விட முடியாது என கூறப்பட்டுள்ளது" என்றார்.

புதிதாக ஒரு வேதாகம வகுப்பு

யாழ். மறைக்கல்வி நடு நிலையத்தில் இம்மாதம் 3 ஆம் திகதி வேதாகம கற்றல் வகுப் புகள் சிறப்புற ஆரம்பமாகின. மறைவட்ட குரு முதல்வர் அருட்திரு மைக்கல்சாமி தாம் மரியாயின் சேனையின் பொறுப்பாளராக இருந்த காலத்தில் வேதாகம கற்றல் வகுப்புகளின் அவசியத்தை உணர்ந்ததாகவும், பொது நிலையினர் பங்குபற்றக்கூடிய விதத்தில் இப்பொழுது இது ஆரம்பிக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கப்பட்ட தொன்று என்றும் குறிப்பிட்டார். தற்காலத்தில் மாற்றுச் சபையினரின் எதிர்வாதங்களுக்குப் பதில்தர இப்பயிற்சி மிகுந்த வாய்ப்பாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார். விரிவுரையாளர் அருட்திரு எவ். ஞானானந்தனின் பங்களிப்பின் பயனாக விரிவுரைகள் ஆரம்பமாகின. நூற்றுக் கதிகமானவர்கள் இவ்வகுப் பில் பங்கு கொள்கின்றனர்.

முதலிடம்

பாதுகாவலன் பத்திரிகை யைப் பங்கு ரீதியாக விநி யோகிப்பதில் முதலாமிடத் திலுள்ள மூன்று பங்குகள் யாழ் புனித யாகப்பர் ஆல யம், யாழ். புனித மரியன்னை பேராலயம், பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம் என் பனவாகும்.

நுவரெலியாவிற்கு சிறப்பிடம்

மறைக்கல்வியை கற்பிக்க ஆரம்பித்து வருடம் நூற்றி ஐம்பதுகளை கடந்து கொண் டிருக்கும் இக்கால எல்லை யிலே மறைக்கல்வியின் நூற்றி ஐம்பது வருடத்தை நினைவு கூரும் விழா, மார்கழித் திங் கள் 12ஆம் நாள் கண்டி ஆயர் அதிவணக்கத்துக்குரிய வியானி பெர்னான்டோ ஆண்டகையின் தலைமையில் கண்டியில் நடை பெற்றது. மறைக்கல்வி அதி பர் அருட்திரு அலெக்ஸ்தஸநா யக்க பங்குபற்றிய இவ்விழா

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

இராஜசிங்கம், திரு மறைப்பணி நிலைய இயக்குனர் அருட்திரு.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்.)

குடியாட்சிக்கு சார்பாக பத்திரிகை

பிலிப்பின்ஸ் இல் கடந்த மூன்று ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்ட செய்தித்தாளான 'வெரித்தாஸ்'(Veritas) தற்பொழுது மீண்டும் வெளி வரத் தொடங்கியுள்ளது.

மணிலாப் பேராயர் கருதி னால் சின்னின் முயற்சியினால் தொடக்கப்பட்ட வார இத ழான 'வெரித்தாஸ்'ஐ வாங் குவோர் எண்ணிக்கை 87ஆயி ரத்திலிருந்து 22ஆயிரத்திற்கு குறைந்து போனதால், இவ் விதழ் நிறுத்தி வைக்கப்பட் டிருந்தது. ஆனால் தற்பொழுது

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

முக்கிய செய்தி

சென்ற வாரம் யாழ். நகரில் நடை பெற்ற திருமறைக் கலாமன்றத்தின் கலைவிழா பற்றிய செய்தியை அதற்குரிய முக்கியத்துவத்துடன் முன்பக் கத்தில் பிரசுரிக்க முடியா மைக்கு வருந்துகிறோம். முழுச் செய்தியும் உள்ளே 2 ஆம் 7 ஆம் பக்கங்களில் பிரசுரிக்கப்படுகின்றன.

பாவம் ஓரிடம்
பழி ஓரிடம்

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

அன்னையும் குருவும்

குருத்துவத்துக்கான தயாரிப்பின் பிரச்சினைகள் குறித்து ஐப்பசிமாதம் முழுவதும் உலக ஆயர்கள் பேரவை விவாதிக்கவிருக்கின்ற சூழ்நிலையில் சென்ற 11ஆம் திகதி குருக்களின் வாழ்வில் அன்னை மரியின் பங்கு என்ற கருத்தை திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் விளக்கிக் கூறியமை வாசகர்கள் அறிந்ததே.

தங்களின் தாயாக வழங்கப்பட்ட அன்னைமரி மீதான அன்பிற்கு குருக்கள் உறுதியான சாட்சிகளாக விளங்கவேண்டும்; குருத்துவத்துக்கான தயாரிப்புக்கு உதவும் நோக்கில், இளைஞர்கள் அன்னை மரியைத் தங்கள் உள்ளத்தில் தாங்கிச் செல்ல வழி நடத்த வேண்டும் என்பதே திருத்தந்தையின் விருப்பமாகத் தொனித்தது.

யேசுவின் பெயரால் போதிப்பதற்கும், செயலாற்றுவதற்கும் தேவையான பலத்தைப் பெறும் நோக்கில் ஒவ்வொரு குருவும் யேசு அன்னைமரிமேல் அன்பு பொழிந்ததுபோல அன்பு பொழிய வேண்டும் என்று கூறிய திருத்தந்தை குருக்களுக்கும் அன்னை மரிக்கும் உள்ள உறவு, தாய்க்கும் மகனுக்கும் உள்ள உறவை ஒத்ததாக உணர்த்துகின்றார். தாயிடம் மகன் பலத்தைப் பெறுகின்றான் என்ற கருத்தை வலியுறுத்தும் திருத்தந்தை, குருத்துவப் பணியின் பாதையில் ஒரு குரு சந்திக்கும் தடைகளையும், துன்பங்களையும் அன்னைமரியுடனான புதல்வருக்குரிய பாசப்பிணைப்பால் மேற்கொள்ள முடியும் என்கிறார்.

'அன்னையும் குருவும்' என்ற தலைப்பானது 'முன்னறி தெய்வங்கள்' என்ற பதத்தை நினைவூட்டுவதாக தொனிக்கின்றது. ஆனால் நாம் மேற்கூறிய உறவு விளக்கம் அந்த மாயையைப் போக்குகின்றது.

குருத்துவ வாழ்வில் ஒரு குரு சந்திக்கும் தடைகள், துன்பங்கள் சாதாரண மக்களாலே இலகுவாக உணரப்படாதவை. குடும்பத்திலே தந்தையை முன் அறி தெய்வமாகக் காணும் குழந்தை தந்தையின் துன்பங்களைப் பற்றி உணர்ந்து கொள்வதில்லை. ஆனால் தந்தை தன் பணியை ஆற்றிட எதிர்கொள்ளும் சவால்களை வார்த்தையால் வடித்திட முடியாது. அதுபோலவே திருச்சபையிலே குருவாக பணியாற்ற தங்களை அர்ப்பணிப்பவர்களும் பல்வேறு தடைகளையும், துன்பங்களையும் எதிர்கொள்கின்றனர் என்பதை திருத்தந்தையின் விளக்கத்தில் இருந்து உணர்ந்து கொள்ளவேண்டும்.

குருத்துவப் பணியின் பாதையில் தங்கள் பயணத்தைத் தொடர்பவர்களைப் பற்றி ஆராய்

குருக்களிடையே ஒற்றுமை

விரைவில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் பேரவையின் கருப்பொருள் பற்றித் திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர், அவரின் மூவேளை ஜெபவுரையில் விளக்கிவருவது நாம் அறிந்ததே. பெப்ரவரி 25ஆம் திகதி ஜெபவுரையிலும் இப்பொருள் பற்றிய சிந்தனைகளையே வழங்கினார்.

"குருத்துவத் திருப்பணி குழுவாக செயற்பட வேண்டிய ஒன்று. கிறீஸ்து திருப்பணிக் குருத்துவத்தை ஏற்படுத்திய போது சீமோன் இராயப்பரை தலைமையாகக் கொண்ட 12 அப்போஸ்தலர்கள் குழுவிடம் அதனை ஒப்படைத்தார். எனவே குருத்துவத் திருப்பணி அனைத்து குருக்களையும் உள்ளடக்கிய ஒரு குழுவின், சமூகத்தின் திருப்பணியாகும். குருத்துவத் திருநிலைப் பாட்டைப் பெறும் எல்லோரும் இணைந்து ஒன்றிப்பு உணர்வுடன் இத் திருப்பணியை ஆற்ற வேண்டும்.

குருத்துவப் பயிற்சி குறித்து கலந்துரையாடவிருக்கும் உலக ஆயர் பேரவையில் மேற் சொன்ன கருத்துக்களும் விவாதிக்கப்படும். தங்களின் வாழ்வில் அன்பை வெளிப்படுத்தும் குருகுலத்தார், கிறீஸ்தவ சமூகத்தைக்கட்டியெழுப்பி, அதை முன்னேற்றும் பெரும்பணியில் ஒத்து நின்று செயற்படுகின்றனர்.

இவர்கள் கிறீஸ்துவின் அன்புக்கு சாட்சிகளாய்த் திகழ வேண்டும். இவ்வன்பு குருகுலத்தோர் மத்தியில் நல்லதொரு உறவில் வெளிப்படுத்தப்பட வேண்டும். இது போன்ற கருத்துக்கள் பற்றிக் கடந்த வாரங்களில் கண்டுணர்ந்தோம்," என்றார் திருத்தந்தை.

இன்னும் குருக்கள் ஒருவர் மற்றவருக்கு செய்யும் உதவியும், ஒத்துழைப்பும் அவர்கள் தங்களின் குருத்துவத் திருப்பணிகளை நிறைவு செய்ய, அவைகளை முழுமையாக ஆற்ற உதவ வேண்டும். இவ்வாறு குருக்கள் திருப்பணியை ஆற்றும்போது, அவர்களின் அனைத்து தியாகங்களையும் ஏற்க குரு வழி நடத்தப்படுகிறார்" என்று பகர்ந்தார் திருத்தந்தை.

குருக்கள் உழைப்பதற்குத் தூண்டுதலாய் இருக்கும் சகோதர அறிவு பற்றி 2 ஆம் வத்திக்கான் பொதுச்சங்கமும் கோடிட்டுக்காட்டியுள்ளது. குருத்துவ திருவழிபாட்டால் தங்களையே குருத்துவத்திற்கு அர்ப்பணித்திருக்கும் குருக்கள், தங்களுக்குள்ளே சகோதர குருத்துவ முறையில் பிணைக்கப்பட்டுள்ளார்கள். இப்பிணைப்பு சகோதர நடவடிக்கையை மட்டுமன்று, சகோதர பாசத்தையும் குறிக்கிறது.

வருங்கால குருக்களை உருவாக்குவதில் இது முக்கிய இடத்தை வகிக்கிறது. குருத்துவத்திற்கு தங்களையே தயாரிக்கும் குருக்கள் மத்தியில் சகோதர அன்பை வளர்க்க இது தூண்டுதலாய் இருக்கும். இவ்வாறு வளரும் சகோதர அன்புப் பிணைப்பு ஒரு பரந்த உலகளாவிய தன்மையைக் கொண்டது. குருத்துவப் பயிற்சி மையங்களிலும், குரு முகாமைத்துவ இல்லங்களிலும் இப்பண்பு உடனடியாக, நிட்டவட்டமான முறையில்உண்மையாகவே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இளைஞர்கள் ஒருவர் மற்றவரில் அன்பு பூண இவ்விடங்களில் தான் கற்றுக்கொள்கிறார்கள். இவ்விளைஞர்களை உருவாக்கும் இவ்விடங்கள் சகோதர அன்புச் சூழ்நிலையில் இவர்கள் வாழவும் வழி அமைக்கின்றன.

குருத்துவப் பயிற்சி பற்றி விவாதிக்கவிருக்கும் பேரவைப் பிரதிநிதிகளில் இறை அருள் நிறைந்து விளங்க அன்னை மரியின் பரிந்துரையை இறைஞ்சுவோம்.

கலைநிலா

திருமறைக்கலாமன்றத்தின் கலைவிழா

— மதி

யாழ். மறைமாவட்டத்தின் கலாச்சாரப் பிரிவான திருமறைக்கலாமன்றம் வழங்கிய கலைவிழா கடந்த 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் இலக்கம் 238 பிரதான வீதியில் அமைந்திருக்கும் மேற்படி மன்றத்தின் அரங்கில் இடம்பெற்றது. திருமறைக்கலாமன்ற வரலாற்றில் ஒரு புதிய பரிமாணமாகவும், ஈழத்துக் கலை இலக்கியப் பரப்பில் முக்கியத்துவம் மிக்கதாகவும் அமைந்த அவ்விழாபற்றிய ஒரு செய்தித் தொகுப்பை மேற்படி விழாவில் பங்குபற்ற முடியாத கலை இலக்கிய ஆர்வலர்களை முன்னிட்டு "கலைநிலா"வில் தருகிறோம்.

24ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு மன்றத்தின் இயக்குனர் பேராசிரியர் நீ. மரியசேவியர் மன்றத்தின் புதிய பணிமனையைத் திறந்து வெள்ளை பூசப்பட்டு கலை இலக்கிய மணங்கமழ புன்னகை பூத்து நிற்கிறது, தமிழ் மக்களின் உள்ளம் போல.

தமிழ் மக்களின் வரலாற்றின் உருவகமாகத் திகழும் இவ்வரங்கில் நடைபெற்ற கலைவிழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் 24ஆம் திகதி மாலை 5.00 மணியளவில் ஆரம்பமாகியது. அன்றைய நிகழ்ச்சிகளின் சிறப்பம்சமாக திருமறைக் கலாமன்றமும், நாடக, அரங்கக் கல்லூரியும் இணைந்து நடாத்திய நாடக, அரங்கக் களப்பயிற்சியின் 1989ஆம் ஆண்டுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. நிகழ்ச்சிகளுக்கு யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் தலைமை தாங்கினார். மாலை 5 மணியளவில் ஆயர், இயக்குனர், மற்றும் சிறப்பு

கள், துன்பங்கள் சாதாரண மக்களாலே இலகுவாக உணரப்படாதவை. குடும்பத்திலே தந்தையை முன் அறி தெய்வமாகக் காணும் குழந்தை தந்தையின் துன்பங்களைப் பற்றி உணர்ந்து கொள்வதில்லை. ஆனால் தந்தை தன் பணியை ஆற்றிட எதிர்கொள் ளும் சவால்களை வார்த்தையால் வடித்திட முடி யாது. அதுபோலவே திருச்சபையிலே குருவாக பணி யாற்ற தங்களை அர்ப்பணிப்பவர்களும் பல்வேறு தடைகளையும், துன்பங்களையும் எதிர்கொள்கின் றனர் என்பதை திருத்தந்தையின் விளக்கத்தில் இருந்து உணர்ந்து கொள்ளவேண்டும்.

குருத்துவப் பணியின் பாதையில் தங்கள் பயணத்தைத் தொடர்பவர்களைப் பற்றி ஆராய் வதற்காக கூட்டப்படுகின்ற ஆயர் பேரவைக்கு அனைத்து இறைமக்களும் தமது பங்களிப்பை ஆற்ற அழைக்கப்பட்டுள்ளனர்.

காலத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றபடி குருக் களின் உருவாக்கத்தில் மாற்றங்கள் கொண்டுவரப் படவுள்ளன. இத்தகைய புதிய அணுகுமுறைகள் பரிசுத்த ஆவியின் ஒளியில் கண்டுகொள்ளப்பட வேண்டும். இறை ஏவுதலால் இவற்றை ஆயர் பேரவை உணர்ந்துகொள்ள முழுத்திருச்சபையும் அதற்காகச் செபிக்க கடமைப்பட்டுள்ளது.

திருத்தந்தை கூறுவதுபோன்று எமது குருக்கள் யேசுவின் பெயரால் போதிப்பதற்கும் செயலாற்றுவ தற்கும் தேவையான பலத்தை அன்னைமரியிடம் பெற்றுக்கொள்ள எமது குருக்களுக்காகச் செபிப் போம்.

திருச்சபையின் வரலாற்றில் அன்னைமரியாள் ஆற்றிய பணி அளப்பரியது அல்லவா? எனவே எதிர் வரும் நாட்களிலும் அது நீடிக்கும் என்பதில் நம் பிக்கை கொண்டு அவள் மூலமாக இறைவனை மன்றாடுவோம்.

உறவில் வெளிப்படுத்தப்பட வேண்டும். இது போன்ற கருத் துக்கள் பற்றிக் கடந்த வாரங் களில் கண்டுணர்ந்தோம்,'' என்றார் திருத்தந்தை.

இன்னும் குருக்கள் ஒருவர் மற்றவருக்கு செய்யும் உதவி யும், ஒத்துழைப்பும் அவர்கள் தங்களின் குருத்துவத் திருப் பணிகளை நிறைவு செய்ய, அவைகளை முழுமையாக ஆற்ற உதவ வேண்டும். இவ் வாறு குருக்கள் திருப்பணியை ஆற்றும்போது, அவர்களின் சொந்த நலன் தலைதூக்கக் கூடாது. மாறாக இப்பணி இறீஸ்துவின் அழைப்புக்குப் பதில் அளிக்கவல்லதாய் இருக்க வேண்டும்.

ஒரு குரு உண்மையிலேயே கிறிஸ்துவில் திருப்பணியை ஆற்ற விரும்பினால், தன் உடன் வாழும் சகோதர குருக் களிடம் ஒத்துணர்வு இல்லா மல் அவர் அப்பணியை செய்ய முடியாது. குருக்கள் சகோதரர் களுக்கு ஒத்துழைப்பு தரும் வழிகளைத் தேடுகையில் ஆய ரின் வழிநடத்துதலில் எந் தெந்த வழிகளிலெல்லாம் தனது உதவும் கரங்களை நீட்ட முடியுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் உதவ வேண்டும்.

இவ்வுண்மையான ஒத்து ழைப்புக்குத் தேவைப்படும்

புதிய பரிமாணமாகவும், ஈழத் துக் கலை இலக்கியப் பரப்பில் முக்கியத்துவம் மிக்கதாகவும் அமைந்த அவ்விழாபற்றிய ஒரு செய்தித் தொகுப்பை மேற்படி விழாவில் பங்குபற்ற முடியாத கலை இலக்கிய ஆர் வலர்களை முன்னிட்டு ''கலை நிலா''வில் தருகிறோம்.

24ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு மன்றத்தின் இயக்குனர் பேராசிரியர் நீ. மரியசேவியர் மன்றத்தின் புதிய பணிமனையைத் திறந்து வைத்தார். கருத்தில் பல கன வுகளுடன் அவரும், அவரு டைய கனவுகளுக்கு என்றும் கைகொடுக்கும் அவருடைய துணையாளர்களும் கலைப் பணி என்பது கடவுளின் பணியே என்ற உறுதிப்பாட் டுடன் புதிய ஒன்றிணைக்கப் பட்ட பணிமனையில் நுழைந் தனர்.

1970களில் தமிழ்தேசிய எழுச்சியின் மையமாய் விளங் கிய தமிழர் விடுதலைக் கூட் டணியின் காரியாலயம் 1981 இல் காடையர்களால் தீக்கிரை யாக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை தமிழினத்தின் துன்பங்களின் அடையாளமாக புல்லடர்ந்து புகைபடிந்து பாழ டைந்து கிடந்த அதே இடம் இன்று திருமறைக் கலாமன் றத்தின் கைவண்ணத்தால்

ஆரம்பமாகியது. அன்றைய நிகழ்ச்சிகளின் சிறப்பம்சமாக திருமறைக் கலாமன்றமும், நாடக, அரங்கக் கல்லூரியும் இணைந்து நடாத்திய நாடக, அரங்கக் களப்பயிற்சியின் 1989ஆம் ஆண்டுக்கான சான் றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. நிகழ்ச்சிகளுக்கு யாழ். ஆயர் மேதகு வ. இயோ குப்பிள்ளை ஆண்டகை அவர் கள் தலைமை தாங்கினார். மாலை 5 மணியளவில் ஆயர், இயக்குனர், மற்றும் சிறப்பு விருந்தினர்கள் யாவரும் மங் கள விளக்கேற்ற விழா இனிதே ஆரம்பமாகியது. முதலில் மன் றத்தின் பொதுச் செயலாளர் திரு. V. J. கொன்ஸ்ரன்டைன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த் தினார். வரவேற்புரையைத் தொடர்ந்து கலாமன்றத்தின் இசைப்பகுதியினர் வழங்கும் 'சப்த கானங்கள்' என்ற இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இசைத்தென்றல் M. யேசு தாஸ் தாமே எழுதி இசை யமைத்த பாடல்களை பல் வேறு பாடகர்கள் தம் இன் குரலால் இசைத்து நிகழ்ச்சியை சிறப்புறச் செய்தனர்.

'சப்த கானங்களைத் தொடர்ந்து யாழ். ஆயர் தமது தலைமையுரையை நிகழ்த்தி னார். கத்தோலிக்க திருச்சபை

(தொடர்ச்சி 7 ஆம் பக்கம்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

ஒவ்வொரு மனிதனும்....!

அது ஒரு ஓலைக்குடிசை பாயோடு பாயாக ஒட்டிக் கிடந்த அன்னம்மாக்கிழவி 'லொக்கு லொக்கு' என்று இருமியவாறு சுருண்டு கிடக்கிறாள். அடிவயிற்றிலிருந்து நெஞ்சுக் குழிவரை ஒரே அரிப்பு, எழுந்துநிறகவோ தன் பேரப்பிள்ளையை உதவிக்குக் கூப்பிடவோ முடியாத நிலையில் முயன்று பார்க்கிறாள்.

அவளின் ஓலம் அடிநாதத்திலேயே தங்கிவிடுகின்றது. முயற்சித்தாள், ஆனால் முடியவில்லையே.....!

பேசாமல் தன் மனச்சுமைகளை எல்லாம் மனத்தில் அடக்கியவளாக ஒருவித ஏக்கப் பெருமூச்சுடன் மீண்டும் சுருண்டு கொள்கிறாள்.

விளையாட்டு முடிந்து ஆயாசத்துடன் ஓடிவந்த, அவளின் பேத்தி வசந்தி'' ஆயா... ஆயா... என்னாச்சு உங்களுக்கு. மாலைப்பொழுதானால், ஓடிவா என் கண்ணே! என்மடியிலே உட்காரம்மா, பாட்டிக்கதை எல்லாம் நான் உனக்கு சொல்லித்தருவேன். இப்படியே உட்காரம்மா என்று சொல்வீர்களே ஆயா... உங்க பேத்தி வந்திருக்கேன். இன்னிக்கு புதுக்கதை ஒண்ணும் இல்லையா...? சொல்லுங்களேன் பாட்டி'' என்றவாறு அன்னம்மாக் கிழவியைத்தட்டி எழுப்பி உசார்ப் படுத்துகிறாள் வசந்தி.

****

ஆ. மேரி கலிஸ்ரா
சிலாலை

****

வசந்தியின் குரலில் ஏதோ ஒரு மின்சார சக்தி இருக்கிறதோ என்னவோ!.

திடீரென்று சுய உணர்வு வந்து விழித்த பாட்டி ''ஓ! என் பேத்தியா? வாம்மா... வா! இந்த உலகத்திலே உன்னை விட்டால் எனக்கு யாருமே கதி இல்லையம்மா.. எது தப்பினாலும் எம்பேத்திக்கு நான் செய்கிற கடமையை மறக்காம செய்திட்டு வந்தன். உங்கம்மா கண்ணை மூடியபோது எல்லாத்துக்கும் அம்மா நீயே பொறுப்பு என்று உன்னை என்னிடம் ஒப்படைச்சிட்டு நிம்மதியா போய்ட்டா.. அவ புண்ணியவதி. கொடுத்து வச்சவ ஆனால் இன்றைய நிலையிலே நான் நீண்ட காலம் உன்னோடு சேர்ந்து வாழ்வேனோ இல்லையோ அதுதாம்மா எனக்குக் கவலை.''

''பாட்டி கவலைப்படாதேங்க... இது வரைக்கும் ஆண்டவனை நான் கண்ணால் பாத்ததில்லை... ஆனால் ஆண்டவன் ஒருத்தன் இருக்கான் என்ற உண்மையை உங்க வடிவிலே நான் கண்டு கொண்டேன். எனக்கு எல்லாமே நீங்கதான் பாட்டி,'' என்று ஆதங்கப்பட்டாள் வசந்தி.

அன்னம்மாப்பாட்டி தொடர்ந்து இருமலுக்கிடையே கூறுகிறாள். ''மகளே! நான் ஒண்ணு சொல்றன் கவனமாக் கேட்டுக் கோம்மா. தெய்வம் நேரில வந்து காட்சி கொடுக்கா தம்மா. எவன் எவன் துன்பத்தில்வாழ்கிறானோ, என்னைப் போன்று நோயிலும், முதுமையிலும் சிக்கிச் சீரழிகின்றானோ, நம்ம சனங்களினால் ஆகாதவன் என்று ஒதுக்கித் தள்ளப்படுகின்றானோ... அவங்க மத்தியிலே நீ தெய்வத்தைக் கண்டுக்கணும்.''

சிறுகதை

''இன்றோ, நாளையோ! நான் செத்துப்போயிடலாம். ஆனால் உனக்குஇந்த மண்ணிலே அநாதை என்ற நிலை வராமல் உனக்கென்று ஆயிரம் பாட்டிகள், அம்மாக்கள், அண்ணா, தங்கைகள் எக்கச் சக்கமாக வரலாம். அவர்கள் ஒவ்வொருவரையும் மனசார நீ நேசிக்கும் போது நீ ஆண்டவன் யேசுவையே காணுகின்றாய்.

வாழ்வின் இறுதிக்கட்டத்திலே நிற்கின்ற காவோலை நான். இன்றோ நாளையோ நான் கீழே விழலாம். ஆனால் கீழே விழுந்த நான் உன் வாழ்விற்கு உரமாக, பசளையாக உன்னை ஊக்குவித்துக் கொண்டே இருப்பேன்.

போம்மா...போ! தனியொரு பாட்டி ஒருத்தியைமட்டும் நினைவில் கொள்ளாது, மானிடராய் பிறந்த ஒவ்வொரு மனிதரிலும் குழந்தை யேசுவை அவரின் வருகையை எண்ணிப்பார்த்து, அவர் வந்ததின் அர்த்தத்தை உணர்ந்து கொள்ளப்பழகிக் கோம்மா போ...! போய்வா என்ர ராசாத்தி.....''

என்று கூறியவாறு தன் கண்களை மூடிக் கொள்கிறாள் அன்னம்மாப்பாட்டி. சற்று நேரம் வசந்தியால் எதுவுமே சொல்லமுடியாவிட்டாலும், பாட்டியின் ஒவ்வொருவார்த்தையும் ஆணித்தரமானவை, இந்தமுதிர்ந்த வயதிலும் இவளின் உள்ளத்தின் ஆழத்திலே புதைந்து கிடந்த விசுவாசந்தான் இத்தனை வயதுவரை இவளை வாழவைத்தது என்ற உணர்வுடன் ஒருவித உத்வேகத்துடன் ஓர் இரு சொட்டுக் கண்ணீர்த்துளிகளை அவளின் பாதத்திலே உதிர்த்து விட்டு, புறப்பட்டுச் செல்லுகின்றாள் வசந்தி.

ஆம்! இன்று அவள் ஒவ்வொரு மனிதரிலும் பாட்டி உருவிலே யேசுவைக்காணுகிறாள். அவர்களுக்கு சேவை செய்வதிலே ஒருவித நிறைவை எய்துகிறாள்.

எங்கோ ஒருவர் பாடும் பாடல் ஒன்று அவளின் காதிலே எதிரொலிக்கின்றது.

'ஒவ்வொரு மனிதனும் என் நண்பன். ஒவ்வொரு மனிதனும் சகோதரன் காரணம் அவனும் மனிதன்.''

சிலிர்த்து எழுந்த அவள் தன்னிலே யோசிக்கிறாள்' பாட்டி பழமைவாதி அல்ல. இன்றைய நாட்களின் 'புதுமைப் பெண்' என்று.

(யாவும் கற்பனையல்ல)

பாடுகளின் பாதை

சிலுவையின் பாதை சிந்தனையின் பாதை
சீற்றத்தை அடக்கும் சிக்கனமான பாதை
தோற்றும் உலகின் துயர்துடைக்கும் பாதை
தோலைப் போன்ற அவசியப் பாதை

பொய்மையை உடைக்கும் புண்ணிய பாதை
பொருளற்ற வாழ்க்கையை புயலாக்கும் பாதை
உள்ளத்து அமைதிக்கு உன்னத பாதை
உலகின் கண்ணுக்கு ஓர் வெறுப்பான பாதை

கிறிஸ்தவ வாழ்வுக்கு இன்பமான பாதை
கிறிஸ்துவை அடைய அண்மிய பாதை
பார்க்கும் உலகிற்கு பகட்டான பாதை
பண்புடை மக்களின் பரிவன்புப் பாதை

மாறும் உலகிற்கு மறு வாழ்வுப் பாதை
மனம் திரும்ப அழைக்கும் மன்னிப்பின் பாதை
பண்புடை கிறிஸ்தவ பணி வாழ்வின் பாதை
பல காலம் வளரும் பாடுகளின் பாதை

M. நிர்மலராஜ்
அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்.

அனுபவக் கல்வி:

* ஒரு குழந்தை வெறுக்கப்படும் சூழ்நிலையில் வாழும் போது குறை சொல்லக் கற்றுக்கொள்கிறது.

* கேலிக்கிடையில் வாழும் போது வெட்கப்படக் கற்றுக் கொள்கிறது.

* அவமானத்திற்கிடையில் வாழும் பொழுது குற்ற உணர்வு ஏற்படக் கற்றுக்கொள்கிறது.

காவலன்
கண்மணிகள்

ஒளி: 4	எம் விழிகளின் ஒளி யேசு
கூர்: 8	எம் வாழ்வின் வழி யேசு

விழி வழி!

பொறுப்பு:

பொறுப்பற்ற தம் பிள்ளைகளைக்கட்டி, ஆளமுடியாமல் இன்று பெற்றோர் படும்பாடு பெரும்பாடு, பெற்றோரைப் பிள்ளைகளும், பிள்ளைகளைப் பெற்றோரும் புரிந்து கொள்ள முடியாமல் மன உராய்வுகளால் உள்ளத்தில் ஊமைக்காயங்கள் பெருகி வருவதால் வீட்டிலிருந்து வெளியேறுபவர் பெருகி வருகின்றனர். இதனைத் தடுக்க வழியில்லையா? உண்டு.

ஒரு கிறிஸ்தவன் தான் பெற்றுக் கொண்ட பெருவாழ்வின் மகிமையை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். தான் வாழும் இல்லத்தில் பொறுப்பும், கடமையும் எவையென சரியாக அறிந்து கொள்ள வேண்டும். அத்துடன் அவற்றை நிறைவேற்றும் வழிகளையும் கிறிஸ்துவ வாழ்வு மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கண்மணிகளே! தபசு காலத்தில் பெற்றோருக்கான உம் பொறுப்பு என்ன என்பதை சற்றுச் சிந்தித்துப்பார்? உறுதி பூசுதல் என்னும் திருவருட்சாதனம் அருளிய வழியாக நீங்கள் திடம் கொள்ளவில்லையா? ஒப்புரவு அருட்சாதனம் மூலம் சுத்தம் செய்யவில்லையா? திருப்பலிகண்டு நற்கருணை பெற்று கிறிஸ்துவில் ஒன்றிக்கவில்லையா? இந்தக்காலத்தை நல்ல முறையில் அனுசரித்து, கிறிஸ்துவின் பிள்ளைகளாக மாறி வீட்டிற்கு ஒளியேற்றும் நல்மகனாக, மகளாக வாழ வாழ்த்தும்.

அன்பின்
அன்பு விழி.

சிந்தனைக்கு: யாகப்பர் 4: 1—2.

''உங்களிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படக் காரணமென்ன? உங்கள் உடலில் போராட்டம் விளைவிக்கும் கீழ்த்தரமான ஆசைகள் அல்லவா? பிறர் பொருட்கள் மீது ஆசை வைக்கிறீர்கள்; அதைப் பெறாததால், கொலை செய்கிறீர்கள்; பேராசை கொள்கிறீர்கள். ஆசைப்படுவதை அடைய முடியாததால் சண்டை சச்சரவு உண்டாக்குகிறீர்கள். ஆசைப்படுவதை ஏன் அடைய முடியவில்லை? இறைவனிடம் கேட்காததால்தான்''

இன்னல் பல நேரிடினும் உண்மைபேசு கண்ணே!

இன்னல்கள் பல உனக்கு வந்திடினும்—நீ
உண்மைபேசிட வேணுமடி கண்ணே!
உன்னுள்ளம் முழுவதிலும் மெய்நிறைந்து—இந்த
உலகிற்கு உத்தமியாய் வாழ்ந்திடு கண்மணியே.

வாய் கொண்டு கூறிடும் வார்த்தை—அதில்
உண்மையே நின்றிருக்கணும் கண்ணே!
பேய் வந்து பேசிடினும் கூட—நீ
பேசிடனும் உண்மையினை கண்மணியே.

இனித்திடும் நற்கரும்பினையே—சுவைத்திட
கூலி கேட்கலாமோ கண்ணே?
கனி போல் இனிய உண்மை—அதை
கனிவுடன் சுவைப்பாய் கண்மணியே.

நீ சொல்லிடும் வார்த்தை—நல்
இன்சொல்லாகட்டும் கண்ணே!
தீ போன்ற கடிய—கூடா
சொற்களை வெறுத்திடு கண்மணியே!

தாய் தந்தை முதற் கொண்டு—இந்த
தரணியும் வகுக்கும் கண்ணே!
வாய் தன்னால் கூறிடுவாய்—நல்ல
அன்பான வார்த்தைகளை கண்மணியே!

தொகுத்தவர்கள்
சூ. யூலியற் றாஜினி—169
சூ. யூட் அன்ரன்—170

யார் அந்த விடுதலை வீரன்

உலகில் நீதியற்ற சூழல் நிலவுகின்றது என்றால் அதற்குக் காரணம் மனிதர்களின் பொறுப்பற்ற தன்மையேயாகும். பாவம் நிறைந்த சூழல் என்பது இறைவனை நிராகரிப்பதேயாகும். பரமனைத் துறந்து பாசத்தை மறந்து பாவத்தின் விஷத்திற்கு பலியான மனிதனைப் பணிவுடன் மீட்க வந்த விடுதலை வீரன் யார்? அந்த கிறீஸ்து தான், இந்த அடிப்படை விடுதலை, கிறீஸ்து அளிக்கும் அருட் கொடையே ஆகும். சகல பாவங்களிலிருந்தும் அவற்றின் விளைவுகளிலிருந்தும் விடுதலை தரவல்லவர் கிறீஸ்துவே. சமுதாயத்தின் அடிமட்டத்திலிருக்கும் அடிமை வாழ்வு வாழும் எளியோர், இடையர் பாவங்கள் ஆயக்காரர் புறஇனத்தார் போன்றோரோடு தம்மையே ஐக்கியப்படுத்திய விடுதலை வாழ்வு பெற்றுக் கொடுத்தார். ஆட்களின் அந்தரங்கங்களையும், உள்மனதையும் உணர்ந்தவராய் அவர்களது இன்ப துன்பங்களில் பங்கு கொண்டவராய் விடுதலையின் நற்செயதியை வியப்புடன் எடுத்தியம்பினார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இஸ்ராயேலில் தோன்றி இஸ்ராயேல் மக்களை எகிப்தியரின் அடிமைத் தனத்தினின்று விடுவித்தார். அதே போல் எம் மக்கள் அனைவரும் பாவ வாழ்வு வாழாமால் இருக்க முழுமையான விடுதலையை அளித்தனரும் உடல்கள் எரிந்தன. உடமைகள் பறிக்கப்படுகின்றன. மனித உயிர்கள் அவமதிக்கப்படுகின்றன. வீதியில் நடந்தோர் துப்பாக்கியால் சுடப்படுகின்றனர். வீட்டிலிருந்தோர் வீதிக்குத் துரத்தப்படுகின்றனர். உரிமைக் குரல் எழுப்பிய குற்றத்திற்காக சிறைவாசம் சென்றோர் தொகையாகின்றனர். இவற்றுக்கெல்லாம் விடுதலை அளிக்கும் அந்த புது மனிதன் தான் கிறீஸ்து உலகினதும், மனித வரலாற்றினதும் எல்லா இயக்கமும் நீதியான சகோதரத்துவமான உலகினைப் படைப்பதை நோக்கமாகக் கொண்ட அரசையும், சமுதாய வேற்றுமைப் பாடுகளை வெற்றி கொள்ளலும் ஒழுக்க நெறித் தரித்திரம், அறியாமை பசி போன்றவை மனிதனை இழிவுபடுத்துவதிலிருந்து விடுதலை முயற்சிகள், மனித மாண்பின் உள்ளுணர்வு இவை அனைத்தும் கிறிஸ்துவில் உருவாக்கம் பெற்று கிறிஸ்துவின் இரட்சணிய ஆற்றலிலே தமது பூரணத்துவத்தை எய்துகின்றன. அவர் வழியாக அவரோடு இரட்சணியம் மனித வரலாற்றின் இதயத்தில் குடிகொள்கிறது

இவ்வாறு எம் மக்கள் அனைவரையும் பாவக்குழியில் இருந்து விடுவிப்பதற்காக, விடுதலை வாழ்வை அளிப்பதற்கு அந்தப் பாரச்சிலுவையைத் தோழில் சுமந்து கொண்டு எவ்வளவோ துன்பங்களை எல்லாம் அனுபவித்து விடுதலை வாழ்வைப் பெற்றுத் தந்தாரோ! அவ்வாறே எமது இளைஞர்கள் அனைவர்களும் நமது நாடு சமாதானத்தோடும், ஒற்றுமையோடும் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக கவும், ஒருவர் ஒருவருக்கு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை உள்ளவர்களாகவும் வாழவேண்டும், அப்போதுதான் எமது மக்கள் உண்மையான விடுதலை வாழ்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கொன்செப்ரா ஜெயா மரியதாஸ்,
சென் யூட்ஸ் லேன், இளவாலை.

குருகுமுத்தண்ணையின் கிசு கிசு-59

குருகுமுத்தண்ணை:- என்ன அன்னம், அடிக்கடி ஒரே கொண்டாட்டமாய் இருக்கு?

அன்னம்:- அது அண்ணை பிள்ளையின்ர பிறந்த நாளைக் கொண்டாடிறதில...

குருகுமுத்தண்ணை:- அதுகள் தான் ஊரில இல்லையே அப்ப ஆரோட கொண்டாடிறது?

அன்னம:- அண்ணே அவையள் அந்த நாட்டிலை கொண்டாடினம். ஊரில உள்ளவையளுக்கு செய்து கொடுக்க சொல்லி அனுப்பினதுகள், இதுகளைச் செய்யாட்டி எங்களையும் பட்டிக்காடு எண்டல்லோ நினைப்பினம் அயல்கள்.

குருகுமுத்தண்ணை:- அப்ப நீயும் ரவுண்காறி எண்டு காட்டத்தான் இதுகளைச் செய்யிறாய் போல.

அன்னம்:- இதில என்ன பெரிசா அண்ணை. அண்டைய நாளில் நாலு பேருக்கு கொடுத்து திண்டா ஒரு ஆறுதல் தானே.

குருகுமுத்தண்ணை:- தருமம் படுற பாட்டைப் பாரன்.....

இளைஞரிடையே சலிப்பு ஏற்படுவது ஏன்?

இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள். இளைஞர்களே நாட்டின் முதுகெழும்பு. இப்படியிருக்க இன்று எமது இளைஞர்களிடம், சலிப்பு ஏற்படுவது ஏன்? காரணமில்லாமல் இல்லை. புரிந்துணர்வின்மை, புறக்கணிப்பு, வறுமை, ஏற்றத் தாழ்வுகள், ஏமாற்றம், வேலையில்லாத்திண்டாட்டம், சந்தேகக் கண்ணோட்டம் போன்ற பல பிரச்சனைகளே இளைஞர்களை ஒன்றிலும் பிடிப்பில்லாதவர்களாக்கி விடுகிறது. வாழவேண்டிய பருவத்தில் வாழ்வே இவர்களுக்கு கசப்பாகி விடுகிறது. சமுதாயம் இவர்களைப் புரிந்து கொள்வதில்லை.

இளைஞர்களின் அபிலாஷைகள் வேகாத சோறு போலும் அவர்களின் செயல்கள் வேண்டாத விருந்து போலும் ஆகி விடுகிறது. சமூகம் அவர்களைப் புறக்கணிக்கின்றது. ஆனால் சமூகத்திலுள்ள முதியோர் அனைவரும் அந்த இளமையைத் தாண்டித்தான் வந்தவர்கள் என்பதை அவர்கள் இன்னும் உணரவில்லைப்போலும். சமுதாயப் பண்பாட்டை, பாரம்பரியத்தை கலாசாரத்தை இளைஞர்கள் தவிடு பொடியாக்கி விடுவார்கள் என முதியோர்கள் அஞ்சுகிறார்கள்.

இளைஞர்களின் கருத்துக்கள் ஆலோசனைகள் எதுவும் முதியோர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. "நேற்றுப் பிறந்தவன்களுக்கு என்ன தெரியும்?" இவங்களுக்கெல்லாம் ஏன் தேவையில்லாத வேலை என்ற கேலிப்பேச்சுக்களையே முதியவர்களிடம் எதிர்பார்க்க முடிகிறது.

இன்று எமது இளைஞர்களுக்கு பொறுப்புக்களைத் தர மறுக்கிறார்கள். தங்களுடைய தவறுகள், உள்ளரங்க விடயங்கள் அம்பலமாகிவிடுமெனவும் தாம் கொலுவிறக்கப்பட்டு மக்கள் முன் தூக்கி எறியப்படலாமெனவும் அஞ்சுகின்றார்கள். இதனால் தான் இளைஞர்களின் கருத்துக்கள், எதிர்பார்ப்புக்கள், சிந்தனைகள் முடங்கிக் கிடந்தன. இதனால் ஏற்படும் விளைவுகளே இளைஞர்களை வெதுவாகப் பாதித்துள்ளது. இளந்தலை முறைகளை இவ்வாறான சலிப்புகளிலிருந்து விடுவிக்க ஒட்டுமொத்தமான மனமாற்றம் அவசியமாகிறது.

சந்தியோகு பிரபா
முதலை குத்தி,
உயிலங்குளம்.

அறியாமை

அறியாமை என்பது இறப்பு வரை மனிதனோடு இருக்கும். ஆகவே என்னிடம் அறியாமை இருக்கிறது என்பதையே நினைத்து வருந்தாமல் எம்மிடமுள்ள அறிவைக்கொண்டு அதனைமழுங்கடிக்கவேண்டும். அறிவை வளர்ப்பதன் மூலம் அறியாமையின் தேய்வை அதி

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

முதிர்ச்சியின் உயர்நிலையில் .....

(சென்றவாரத் தொடர்ச்சி)

7. நான் தவறு செய்துவிட்டேன் என்று கண்டவுடனே அதனை ஏற்றுக்கொள்ளவும், அதற்காக மன்னிப்புக்கோரவும் வேண்டிய பணிவும், மனப்பக்குவமும் என்னிடமுள்ளதா?

8. எனது சொந்தத்தேவைகள் வசதிகள் என்பவற்றுக்கப்பால், எனது நண்பர்கள், உறவினர், அயலவர்கள், மற்றும் வசதிகுறைந்தவர்கள் மட்டில் நான் அக்கறை காட்டுகின்றேனா?

9. பிறர் நல்லெண்ணத்துடன் என்னைத் திருத்தும் போது, அல்லது விமர்சிக்கும்போது நான் கோபமோ வெறுப்போ இன்றி அவற்றை ஏற்றுக் கொள்ளுகின்றேனா?

10. பிறருடைய கருத்துக்கள், அபிப்பிராயங்கள் சிபாரிசுகளைப் பற்றிப்பேசுவதோடு மாத்திரம் நின்று விடாது உண்மையுடனும், அக்கறையுடனும் அவற்றைச் செயல்படுத்துகின்றோனா?

மனித நடத்தை ஒவ்வொன்றிற்கும் ஏதோ ஒரு அடிப்படைக்காரணம் உண்டு.

இந்தக் காரணிகளை உணர்கின்ற அளவிற்குத்தான் உறவுகளின் வெற்றியும், தோல்வியும் இருக்கும்.

இவற்றை அதாவது இந்த அடிப்படைக் காரணிகளைப் பற்றி நன்கு அறியாத போது உறவின் சரி பிழைகளைக் காணமுடியாது.

இப்போ இந்த அடிப்படைக் காரணிகளை நாம் பார்ப்போம்.

(1) பாதுகாப்பு, (2) உறவுகள்,
(3) நன் மதிப்பு, (4) தன் நிறைவு.

அச்ச உணர்வுடன் நாம் வாழ முடியாது. எனவே இவற்றை விலக்க நாம் முயல்கிறோம்.

மற்றவர்கள் எம்மை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது எம் எல்லோருடையவும் விருப்பமாகும்.

மதிப்புள்ள ஒருவரைக்தான் எம்மால் ஏற்றுக் கொள்ளவோ அன்பு செய்யவோ முடியும்.

தன் நிறைவு பெற வேண்டும் என்பது ஒவ்வொருவரின் விருப்பமாகும். தனிய இருப்பதால் தன் நிறைவு பெறமுடியாது. இணைந்து இருப்பதில் தான் இது கூடும்.

அருட்தி. ஞான் மரியாம்பிள்ளை

(6) மனித உறவுகளும் தொடர்புகளும்

மனித நடத்தைகளுக்கு காரணமான சில அடிப்படைக் காரணிகளைப்பற்றிய தெளிவான அறிவின்மையே தம்பதிகள் தம்மைத் தாமே தொந்து கொள்ளுவதற்கு ஏதுவாகின்றது மக்களுக்கிடையில் நெருக்கமான செயற்பாடுகளுக்கும், தொடர்புகளுக்கும் சாதக பாதகமான காரியங்கள் எவை என்று நோக்குவோம்.

மனித தேவைகள்

மனிதரெல்லோரும் (ஆணும் பெண்ணும்) சில தேவைகளை அடைவதற்கே முயலுகிறார்கள். அவர்கள் ஆசிக்கும் காரியங்கள் வெளிப்படையான ஆதாரத் தேவைகளாகவே இருக்கின்றன. உம்: உடலின்தேவைகளான காற்று, உணவு, உறக்கம், உஷ்ணம், உறைவிடம் என்பன. மற்றைய தேவைகள் உள்ளம் சம்பந்தமானவை. அவை ஆழமான உளத்தத்துவார்த்தமான தேவைகளாம். அத்தேவைகள் ஒருவரது அடிமனதிலிருந்து அவரையறியாமலே முகிழ்த்தெழுந்து அவரது நடத்தைக்குத் தூண்டுதலாய் அமைந்து விடுகின்றன. அவற்றுள் பிரதானமான சிலவற்றை ஆராய்வோம்.

1. பாதுகாப்பு :

ஆபத்தை விளைவிக்கக் கூடிய எத்தகைய அச்ச உணர்வுகளுடனும், அச்சுறுத்தல்களுடனும், வாழுவதென்பது முடியாதகாரியமாகும். எமது உயிருக்கு அச்சுறுத்தலாகவுள்ள அபாயங்களைத் தவிர்த்துக்கொள்ள பலவழிகளிலும் நாம் மிகவும் கடினமாக முயலுகின்றோம். வீட்டுக்கதவுகளைப் பூட்டிவைக்கிறோம்; வீட்டுக்காவலர்களை அமர்த்துகிறோம்; காப்புறுதிசெய்து கொள்ளுகின்றோம்; ஊழியர் சேமலாபநிதிக்குப் பணம் செலுத்துகின்றோம்; பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுகின்றோம்; சுகாதார சேவைகளை நடாத்துவதோடும், பொலீஸ்படைகளை நிறுவுவதாலும், இவ்விதமாக மனிதபாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன முன்பின் அறியாதவர்களைவிட நன்கு அறிந்தவர்களையே நாம் விரும்புவது இயல்பு. ஏனெனில் அந்நியருடன் பழகுவது ஆபத்தானது என நாம் நன்கு உணருகின்றோம்.

வேதாகம வினா விடைப் போட்டி 32

விடைகளை மாத்திரம் தெளிவாக எழுதி உங்கள் பெயர் முகவரியுடன் 25–3–90 இற்கு முன் 'பாதுகாவலன்' அ. பெ. இல. 2. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

பரிசு ரூபா 25/-

விடைகளை 2 சாமுவேல் (21 – 24) இல் காணலாம்.

வினாக்கள்

1. தாவீதைக் கொல்ல முயன்ற எஸ்பிபெனோப் என்னும் அரசகுலத்தினன் வைத்திருந்த வெண்கல ஈட்டியின் நிறை எவ்வளவு?
2. ''என் இக்கட்டு வேளையில் ஆண்டவரைக் கூவியழைப் பேன்'' என்ற இவ் வார்த்தைகள் யாருடையவை?
3. ஆண்டவர் யார் மூலம் தாவீதுக்கு வரவிருந்த தண்டனை களை முன்னறிவித்தார்?
4. ஆண்டவர் தாவீதிற்குக் கொடுத்த தண்டனை யாது? இதில் இறந்த மக்கள் தொகை எவ்வளவு?
5. இத் தண்டனையினின்று விமோசனம் பெறத் தாவீது அர சன் என்ன செய்தான்?

போட்டி 31 முடிவுகள்

சரியான விடைகள்

1. பாகூரிமில் இருந்த ஒரு வீட்டின் கிணற்றினுள்.
2. ''என் மகன் அப்சலோமை என் பொருட்டு உயிரோடு காப் பாற்ற வேண்டும்,'' என்ற வேண்டுகோள்.
3. அதுறாம்.
4. வயிற்றில் வாளினாற் குத்திக் கொன்றான்.
5. சவுலின் குடும்பத்தைச் சேர்ந்த கேராவின் மகனான ''செமேயி'' என்பவனை.

பரிசுபெறும் நற்பேறாளர்:-

அ. செபமாலை

காத்தான்குளம் - வட்டக்கண்டல்

இம்முறை 44 பேர் சரியான விடைகளை எழுதியுள்ளனர். அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

கலைநிலா

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

யானது என்றும் பாரம்பரியக் கலைகளை வளர்த்தே வந்துள் ளது என்று குறிப்பிட்ட ஆயர் திருமறைக் கலாமன்றமும் அந் நோக்கத்திற்காகவே உருவாக் கப்பட்டது; அந்நோக்கத்தை அது நிறைவேற்ற வேண்டும் என்றார். ஆயரின் உரையைத் தொடர்ந்து நாடக அரங்கக் களப்பயிற்சி அறிக்கை திரு மறைக் கலாமன்றத்தின் நாட கப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. அ. பிரான்சிஸ் ஜெனம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட் டது. காலத்தின் கோலம் பல் வேறு தடைகளை முன்வைத்த போதும் விடாமுயற்சியுடன் செயற்பட்டு பயிற்சி வகுப்பு கள் வைத்து, பரீட்சை நடாத்தி, சான்றிதழ் வழங் கிய அக்களப்பயிற்சி வகுப்பினை

குச் செய்யும் சேவை கடவு ளுக்குச் செய்யும் சேவையே என்ற அவர் அக்கொள்கை வழிநின்று சமுதாய சீர்கேடு களைச் சீர்படுத்தவும், ஏற்றத் தாழ்வுகளுக்கெதிராய் குரல் கொடுக்கவும் மன்றம் முனையு மென்றார். மிகவும் பிரச்சி னைகள் நிறைந்த ஒரு கால கட்டத்தில் களப் பயிற் சி நடாத்தி முடிக்கப்பட்டமை யானது உண்மையில் ஒரு சாத னையே என்ற அவர் இச்சாத னையைப் படைத்த பெருமை விடாமுயற்சியுடனும், தன் னலமின்றியும் உழைத்த ஆசி ரியர்களையே சாரும் என்றார். தொடர்ந்து பேசுகையில் மன் றத்தின் வேகமான வளர்ச்சிக் கும், விரைவான செயற்பாட் டிற்கும் ஆயரின் பேருதவிக ளும், சக ஊழியர்களின் தன் னலமற்ற பெரும் சேவைக



மார்ச் – 11

புனித புலோஜியுஸ் (818–859)

இவர் குருப்பட்டம் பெற்ற தும் குருத்துவக் கல்வி நிலை யம் ஒன்றின் தலைவராக நிய மிக்கப்பட்டார். செபத்தில் மிகுதியான நேரத்தைச் செல வளித்தார். கடுந்தவ முயற்சி கள் செய்வார். அனைவரும் இவரை மதித்தார்கள்.

மார்ச – 12

புனித செரப்பினா (1253)

இவள் குழந்தையாக இருந்த போது தந்தையை இழந்தாள். இவளுக்குப் பொல்லாத குழந்தை நோய் ஒன்று இருந் தது. இவள் பாடுபட்ட யேசுவை முன்னிட்டு தன் துன் பங்களைப் பொறுமையோடு சகிக்க விரும்பித் தன்னை ஒரு கடினமான பலகையில் கிடத் தும்படி சொன்னாள். அசைய முடியாமல் படுத்துக் கிடந்த தினால் முதுகில் எங்கும் புண் கள் ஏற்பட்டு சீழ் வடிந்து வேதனை அதிகரித்தது. ஆண் டவருக்காக அனைத்தையும் நல் மனதுடன் சகித்ததனால் அவள் இறந்தபின் அப்பலகை யில் இனிய மணமுள்ள அழகிய மலர்கள் பல காணப்பட்டன.

மார்ச் – 13

புனித மற்றில்டா (895 – 968)

இவளை இளம் வயதிலேயே ஒரு கன்னியர் மடத்தில் விட்டு வைத்தனர். இவள் உழைப் பையும், செபத்தையும், ஞான வாசகத்தையும் நேசித்தாள். இவள் பெற்றோர் இவளுக்கு மணமுடித்துக் கொடுத்தபின் இவள் கணவர் அரசரானார். பக்தியுள்ள மற்றில்டா தனக் குக் கிடைத்த பதவியைப் பல வித புண்ணியங்களால் அலங் கரித்தாள். நோயாளிகளையும், துன்புற்றோரையும் சந்தித்துப் பேசினாள். பாமரர்களுக்கு வேத சத்தியங்களைக் கற்பித் தாள். கைதிகளுக்கு உதவி செய்தாள். பாவிகளை மனம் திருப்ப முயற்சித்தாள். இவ ளது கணவன் இவளுக்குப் பூரண ஒத்துழைப்புக் கொடுத் தார். இவளது கணவன் இறந்த

வேண்டாம் இப்படி ஒரு திருப்பலிப்பூசை

கத்தோலிக்க கிறிஸ்தவர் களாகிய நமது விசுவாசத்தின் மறைபொருள் திருப்பலிப் பூசை. இயேசுவின் கல்வாரி பலி ஒரு மறைபொருள். அதே மறைபொருள் மீண்டும் மீண்டும் திருப்பலிப்பூசை வழி யாகப் புதுப்பிக்கப்படுகின்றது. இதன் வழியாகப் புதுவாழ் வைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறார் இயேசு. நமது வாழ்க்கையில் திருப் பலிப்பூசைக்கு எந்த அளவு முதன்மை அளிக்கிறோம்? இது ஒரு பொருளற்ற சடங்கா? சுமையா? கடமையா? உலகக் கவலைகளிலிருந்து ஓய்வுபெற விடுக்கும் அழைப்பா? பல பக்தி முயற்சிகளுள் இதுவும் ஒன்றா? திருப்பலிப்பூசையில் நாம் எவ்வாறு கலந்து கொள்ளுகின்றோம்? ஒரு நண் பனைப் பார்ப்பதுபோல் குருவைப்பார்த்துக் கொண்டி ருக்கிறோமா? குறை கூறும் எண்ணத்தோடு பார்க்கி றோமா? ஒரு திரை அரங்கத் தில் பாடல்களைக் கேட்பது போல் கோயிலில் பாடப்படும் பாடல்களைக் கேட்டுக்கொண் டிருக்கிறோமா? நடைபெறும் திருச்சடங்குகளை நாடகம் பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டிருக்கிறோமா? குரு அணிந்திருக்கும் உடைகளை யும், கோயிலின் அலங் கரிப்பையும் கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறோமா? அந்த அமைதியான சூழ்நிலையில் தனித்துத் தியானம் அல்லது செபம் செய்து கொண்டிருக் கிறோமா? அழகாக அடுக்கு மொழியில் வைக்கப்பட்ட திருமறையுரையை எண்ணிக் கொண்டிருக்கிறோமா? அப் படியானால் வேண்டாம் இப் படி ஒரு திருப்பலிப்பூசை.

திருப்பலிப்பூசை ஒரு புனித மான நிகழ்ச்சி. அந்நேரத்தில் நம்மை முழுதும் இறைமக னோடு சேர்த்து இறைத் தந்தைக்குப் பலியாக்கு கிறோம். இறைவாழ்வில் நெருக்கமான முறையில் பங்கு கொள்கிறோம். கிறிஸ்துவின் மறை உடலோடு சேர்த்து ஒப் புக்கொடுக்கும் இத் திருப்பலி யானது மனித வரலாற்றின் ஒரு மையமான நிகழ்ச்சியாக மாறுகிறது. இந்நிகழ்ச்சி இறை மகன் இயேசுவின் வழியாக நம்மையும், நம்மைச்சார்ந்த இவ்வுலகையும் இறைவனுக்கு உகந்ததாக மாற்றும் மறை பொருளாக விளங்குகின்றது. கத்தோலிக்க மதத்தின் மறை பொருள் முழுவதும் இத்திருப் பலிப்பூசையில் அடங்கியுள்ளது.

''கையொன்று செய்ய
விழியொன்று நாட
கருத்தொன்று எண்ண
பொய்யொன்று
வஞ்சக நாவொன்று
பேச, புலால்கமழும்
மெய்யொன்று
சார, செவியொன்று
கேட்கவிரும்பும் யான்
செய்கின்ற பூசை
எவ்வாறு கொள்வாய்
வினைதீர்த்தவனே''

என்று நம் பழந்தமிழ்ப் புலவர் பட்டினத்தடிகளார் தம் முடைய பூசையில் காணப்ப டும் குறைபாடுகளை எடுத்துக் கூறுகிறார். அவரது உள்ளமோ பூசை எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து அப்படி அமைய ஏங்குகின்றது.

நாமும் அவரது ஏக்கத்தில் சங்கமித்து தீய வழிகளைத் தவிர்த்து திருப்பலிப்பூசையில் முற்றும் முழுதாய்க் கலந்து இறைவனின் நற்சேய்களாய் வாழ செயற்படுவோமாக!

ஆசிரியர்: ஜி. ஈ. மிராண்டா
வங்காலை.

நீ குடிப்பது மது, மதுகுடிப்பது உன் உயிரை

களப்பயிற்சி அறிக்கை திரு மறைக் கலாமன்றத்தின் நாடகப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. அ. பிரான்சிஸ் ஜெனம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. காலத்தின் கோலம் பல்வேறு தடைகளை முன்வைத்த போதும் விடாமுயற்சியுடன் செயற்பட்டு பயிற்சி வகுப்புகள் வைத்து, பரீட்சை நடாத்தி, சான்றிதழ் வழங்கிய அக்களப்பயிற்சி வகுப்பினரது முயற்சிகள் அனைவரதும் பாராட்டுக்குரியன. களப் பயிற்சி ஆரம்பத்திலிருந்து சான்றிதழ் வழங்கிய வைபவம் வரை தமது செயற்பாடுகள் அனைத்தையும் திரு. பிரான்சிஸ் ஜெனம் தமது அறிக்கையில் ஆவணப்படுத்தியிருந்தார்.

களப்பயிற்சி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மன்றத்தின் இயக்குனரி பேராசிரியர் நீ. மரியசேவியர் அவர்களும் நாடக அரங்கக்கல்லூரியின் செயலதிபர் திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களும் சிறப்புரைகள் நிகழ்த்தினார்கள்.

மன்ற இயக்குனர் தமது சிறப்புரையில் கலை கலைக்காகவல்ல ஆனால் கடவுளுக்காக என்ற மன்றத்தின் கொள்கையை விளக்கினார். கலைக் நடாத்தி, முடிக்கப்பட்டமையானது உண்மையில் ஒரு சாதனையே என்ற அவர் இச்சாதனையைப் படைத்த பெருமை விடாமுயற்சியுடனும், தன்னலமின்றியும் உழைத்த ஆசிரியர்களையே சாரும் என்றார். தொடர்ந்து பேசுகையில் மன்றத்தின் வேகமான வளர்ச்சிக்கும், விரைவான செயற்பாட்டிற்கும் ஆயரின் பேருதவிகளும், சக ஊழியர்களின் தன்னலமற்ற பெரும் சேவைகளுமே காரணங்களென்றார்.

திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் தமது சிறப்புரையில் நாடகமென்பது மனிதர்களை ஒன்றிணைக்கப் பயன்படும் ஊடகமென்றும், சமயங்களும் இதே நோக்குடனேயே செயற்படுகின்றன என்பதால் அடிப்படையில் இரண்டினதும் இலக்கு ஒன்றுதான் என்றும் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசுகையில் கடந்த ஒருவருட காலமாக இடம்பெற்ற களப்பயிற்சியானது பூரணமான கலைஞர்களை உருவாக்காவிட்டாலும் ஏனெனில் கலைஞராவது தனிப்பட்டவரின் திறமையையும் பொறுத்தது நிச்சயமாக பூரணமான மனிதர்கள் உருவாக உதவியிருக்கிறது என்றார். மேலும் மேடையின் புதிய பரிமாணங்களான

பகுதியுள்ள மற்றவர்கள் தங்களுக்கு கிடைத்த பதவியைப் பலவித புண்ணியங்களால் அலங்கரித்தாள். நோயாளிகளையும், துன்புற்றோரையும் சந்தித்துப் பேசினாள். பாமரர்களுக்கு வேத சத்தியங்களைக் கற்பித்தாள். கைதிகளுக்கு உதவி செய்தாள். பாவிகளை மனம் திருப்ப முயற்சித்தாள். இவளது கணவன் இவளுக்குப் பூரண ஒத்துழைப்புக் கொடுத்தார். இவளது கணவன் இறந்தபின் இவள் உலக மகிமைகளைத் துறந்தாள்.

அறியாமை ...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

கரிக்கலாம். ஆனால் அறியாமையை முற்றாக அகற்றிவிட முடியாது.

எம்மிடமுள்ள அறிவை நினைவிற் கொண்டு நானும் ஒர் அறிவாளி என்ற தற் பெருமையோடு அல்ல ஆனால் தன்னம்பிக்கையோடு வாழ வேண்டும்.

T. யூட், இளவாலை.

சினிமா, தொலைக்காட்சி போன்றவற்றிலும் கலாமன்றம் கவனம் செலுத்த வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தார்.

தனித்துத் தியானம் அல்லது செபம் செய்து கொண்டிருக்கிறோமா? அழகாக அடுக்கு மொழியில் வைக்கப்பட்ட திருமறையுரையை எண்ணிக் கொண்டிருக்கிறோமா? அப்படியானால் வேண்டாம் இப்படி ஒரு திருப்பலிப்பூசை. திருப்பலிப்பூசை ஒரு புனித அப்படி அமைய ஏங்குகின்றது.

நாமும் அவரது ஏக்கத்தில் சங்கமித்து தீய வழிகளைத் தவிர்த்து திருப்பலிப்பூசையில் முற்றும் முழுதாய்க் கலந்து இறைவனின் நற்சேய்களாய் வாழ செயற்படுவோமாக!

ஆசிரியர்: ஜி. ஈ. மிராண்டா
வங்காலை.

நீ குடிப்பது மது, மதுகுடிப்பது உன் உயிரை

சாராயம் நீகுடிக்காதே—அதிலும்
பூராயம் பேசித் திரியாதே
நல்லவன் நீயென வாழ்ந்துவிடு—என்றும்
நலமுடன் நாளைக் கழித்துவிடு.

மயக்கம் தரும் மதுவைக் குடிக்காதே—நீ
மதிமானம் இழந்து சந்தியில் நிற்காதே
உள்ளங்கள் உன்னை வாழ்த்தட்டும்—இன்றும்
உழைத்தே நீயும் உயர்ந்துவிடு.

குடியால் குடியழியும்—உன்
குடும்பமும் குட்டிச்சுவராகிவிடும்.
பெற்ற செல்வங்கள் வெறுத்துவிடும்—நின்
மெய்யும் பொய்யுனுள் மூழ்கிவிடும்.

மதுவின் மீதாசை மனைவிமீது வெறுப்பு—அதனால்
குடும்பத்தில் சண்டையும், சச்சரவும்.
குழப்பத்தில் குடும்ப வாழ்க்கை—அதன்
விளைவு கங்கையின் பெருக்கு கண்ணீரில்.

குடியினால் குடி உயர்ந்ததுண்டோ—நீயும்
குடியினால் குழப்பத்தில் மாண்டனையோ?
குடியே உன் உயிரைக் குடிக்கும்—அதன்
கொடுமையை நீயும் உணராயோ?

வி. ஜி. குணம், கரவெட்டி.

திருச்சபைச் செய்தியைத் தரும் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வாரப்பத்திரிகை

பாதுகாவலன்
PATHUKAVALAN

குருத்துவ உருவாக்கம் கஷ்டமானது

"குருக்களை ஆயத்தம் செய்வதும், உருவாக்குவதும் கஷ்டமான, கட்டாயமானதொரு பணியாகும். அது மறை ஆயர்களின் முதன்மையான பொறுப்புமாகும்." என திருத்தந்தை 3 ஆம் அருள் சின்னப்பர் குருத்துவ உருவாக்கம் பற்றிய ஆய்வரங்குக்கு ஆயத்தம் செய்வதற்காக பெப்ரவரி 15 ஆம் திகதி வத்திக்கானில் கூடியிருந்த சங்க உறுப்பினர்களுக்குக் கூறினார்.

"குருமட வாழ்வில் இறையியலிலும் மேய்ப்புப் பணியிலும் பயிற்சி, குழுவாழ்வு பணி ஆகியவை இடம் பெறுவதுடன் கலாசாரங்களின் அறிகுறிகளும் அவதானிக்கப்படவேண்டும். குருத்துவ உருவாக்கமானது பணிக்கு அழைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் மனித, கிறிஸ்தவ, குருத்துவ தனித்துவத்தின் இசைவான ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டும்" என அவர் மேலும் கூறினார்.

கீழக்கு ஐரோப்பாவில் ஆத்மீகதாகம்

"கிழக்கு ஐரோப்பிய கதவுகளின் திறப்பு கடவுள் நம்பிக்கை உள்ளவர்களுக்கு ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை உண்டு பண்ணும் உறுதிமொழி" என்று கூறியுள்ளார் திருச்சபையின் விசுவாசக் கோட்பாடுகளுக்கான பேராயத் தலைவர் கருதினால் யோசவ் ரட் சிங்கர். நாத்திகத்தை அறவியல் வழியிலேயே கிழக்கு ஐரோப்பிய நாட்டு மக்களுக்குப் படிப்பூட்டி வந்தனர். இதன் எதிர்மாறான விளைவாக ஆன்மீக தாகம் மக்களை எதிர் கொண்டுவிட்டதென்று "கத்தோலிக்கமும் பண்பாடும்" என்ற தலைப்பில் ஸ்பெயின்நாட்டுத் தலைநகரில் உரையாற்றியபோதுகூறினார்.

நியாயமற்ற மதமாற்றம்

நியாயமற்ற வழிகள் மற்றும் வற்புறுத்தல்கள் மூலம் சிறு சிறு கிறிஸ்தவ சமயப் பிரிவுகள் அமெரிக்காவில் ஸ்பானிய மொழி பேசும் மக்களிடையே மதமாற்றங்களைத் தூண்டி வருவதாக அமெரிக்க ஐக்கிய நாட்டின், கலிபோனிய மற்றும் வடமேற்கு மெக்சிக்கோவின் ஆயர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். சிறு கிறிஸ்தவ சபைப் பிரிவுகள் சில தங்களின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் எத்தகைய முயற்சிகளையும் மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக ஆயர்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கை உரைக்கிறது.

ஸ்பானிய மொழி பேசும் கத்தோலிக்கர்களை தங்கள் கிறிஸ்தவ சபைப் பிரிவுகளுக்கு இவை மதம்மாற்றி வருவதாக ஆயர்களின் அறிக்கை கூறுகிறது. கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க வேண்டிய இவர்கள், மக்களை ஒரு கிறிஸ்தவ சபையிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றுவதிலேயே தங்களின் முழுக் கவனத்தையும் செலுத்தி வருவதாக ஆயர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சஞ்சிகை வெளியீடு

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் மாசிமாதம் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லாயன் நிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இம் மாணவர் ஒன்றியத்தின் முதல் வெளியீடான 'ஜனனம்' என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது. 'மரமல்ல தோப்பு' கிறிஸ்மஸ் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கான பாராட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

M. R. பிறின்ஸ் டயஸ்
யாழ். பல்கலைக் கழகம்.

சிறப்பு மலருக்கு கட்டுரைகள்

வண. லோங் அடிகளாரின் நினைவுமுத்திரை வெளியீட்டு விழா சிறப்பு மலரில் பிரசுரிக்க அடிகளாரைப் பற்றிய கட்டுரைகள், குறிப்புகள், படங்கள், ஆவணங்கள், அவருடன் தொடர்புடைய பொருட்கள் என்பவற்றை உங்கள் சொந்த புகைப்படத்துடன் தொடர்பு சாதனக்குழு, வண. லோங் அடிகளாரின் நினைவுமுத்திரை வெளியீட்டு அமைப்பு, 59, பத்திரிசியார் வீதி, யாழ்நகர் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

அ. அன்ரன் ஜெறாட்

அரசு அதிகாரிகள் பாகுபாடு

கியூபா நாட்டில் பள்ளிகளிலும் மதக்கல்வி வகுப்புகள் விரைவில் தொடக்கப்படும் எனத் தான் உறுதியாக நம்பிக்கை கொண்டிருப்பதாக அந்நாட்டின் ஹவானாம் பேராயர் ஹய்மே ஒத்தேகா உரைத்தார். ஹவானா பெருமறை மாவட்டத்தின் விசுவாசிகளுக்கென்று பேராயர் அண்மையில் வெளியிட்ட சுற்றறிக்கையில் பேராயர் இந்நம்பிக்கையை தெரிவித்திருந்தார்.

பங்குத்தளங்களில் இடம் பெறும் மறைக்கல்வி வகுப்புக்களில் கலந்து கொள்வோரையும், அவர்களின் பெற்றோர்களையும் அரசு அதிகாரிகள் பாகுபாட்டுடன் நடத்துவதை பேராயர் ஒத்தேகா இச்சுற்றறிக்கையில் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

கைதிகளுக்கு மறைப்பணி

கியூபா நாட்டில் சிறைக்கைதிகள் திருப்பலியில் பங்கு கொள்ளவும், திருவருட்சாதனங்களைப் பெற்றுக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக சிறை அதிகாரிகள் அறிவித்தனர். கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மற்றும் சமயங்கள் உட்பட 58 மதப் பிரிவுகள் சிறைகளில் மறைபணியாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசிற்கும் கிறீஸ்தவ சபைகளுக்கு மிடையிலான உறவின் முன்னேற்றத்தையே இது காண்பிக்கிறது என கிறீஸ்தவ சபைத்தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கரித்தாஸ் நிவாரணப் பணி

எத்தியோப்பியாவில் பசியால்வாடும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடையவழிவகுத்துத் தருவதில் முன்னுரிமை வழங்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளது கரித்தாஸ் சர்வதேச நிறுவனம். எவ்வித அரசியல்மற்றும் இராணுவதலையீடுமின்றி மனிதாபிமான நிவாரணப் பணிகள் நடத்திச் செல்லப்பட அனுமதி அளிக்கப்படவேண்டுமெனவும் சர்வதேச கத்தோலிக்க பிறரன்பு நிறுவனமான கரித்தாஸ் (Caritas) வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஏற்புடைய காலம்

தவக்காலம் இறைவனுக்கு ஏற்ற காலம். மீட்பின் காலம். பிச்சை இடு, செபம் செய், நோன்பிரு.

திருச்சபை செயற்பட்டிருக்க வேண்டும்

இலங்கை கத். ஆயர்களின் தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவானது, அரசியல் வன்செயல்களும், படுகொலைகளும் இலங்கை மக்களை அச்சுறுத்திய கடந்த ஆண்டில் இன்னும் கூடியளவில் செயற்பட்டிருக்க வேண்டும் என ஆணைக்குழு கூட்டத்தில் திரு. லலித் பெரேரா கருத்துத் தெரிவித்தார்.

அப்பாவி மக்களும், தீவிரவாத சந்தேக நபர்களும் படுகொலைகளுக்கு ஆளாயினர். வீதியோரங்களில் கிடந்த எண்ணற்ற பிணங்கள் துரிதமான செயற்பாட்டை கோரி நின்றன. வரலாற்றில் பாரம்பரியத்தைப் பின்பற்றுபவர் அல்லது ஒத்துப்போகிறவர்களைவிட, புத்தூக்கமுள்ள ஒருசிலராலேயே அர்த்தமுள்ள மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என புதுவாழ்வு இயக்க அங்கத்தவரான இவர்கூறியுள்ளார்

முழுமனித ....

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

அனுபவம் வாய்ந்த விரி

நுவரெலியாவிற்கு ...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

31ஆம் நாள் நினைவு

M. R. பிறின்ஸ் டயஸ்
யாழ். பல்கலைக் கழகம்.

முகவரிக்கு அனுப்பிவையுங்கள்,
அ. அன்ரன் ஜெறாட்

ஏழு வேதசாட்சிகளின் விழாவில் ஆயிரக்கணக்கான யாத்திரீகர்

தாய்லாந்தின் ஏழு வேத சாட்சிகளுக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் வழங்கியதைத் தொடர்ந்து அவர்கள் வாழ்ந்த இராமமாகிய சொங் கொன்னில் நடைபெற்ற 5 நாள் கொண்டாட்டத்தில் சுமார் 20, 000 மக்கள் கலந்து கொண்டனர்.

மறையாசிரியர் ஒருவர், இரு கன்னியர்கள், ஒரு குடும்பப்பெண், மூன்று யுவதிகள் ஆகிய இந்த ஏழு வேதசாட்சிகளும் தமது விசுவாசத்தை மறுதலிக்க மறுத்ததனால் பொலிசாரினால் 1940 ஆம் ஆண்டில் சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

இறுதிநாட் கொண்டாட்டம் மேகொங் ஆற்றங்கரையில் அமைக்கப்பட்ட ஓர் பீடத்தில் பாங்கொக் பேராயர் கருதினால் கிற்புஞ்சுவின் நற்கருணை வழிபாட்டுடன் முடிவுற்றது. இவ்விழாவில் தாய்லாந்தில் 10 மறைமாவட்டங்களின் ஆயர்களும் பிலிப்பைன், லாவோஸ் நாட்டு ஆயர்களும் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் டயஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

முழுமனித ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுபவம் வாய்ந்த விரிவுரையாளரான திரு. R. C. மரியரெட்னம் இக்கருத்தரங்கை நடத்தினார்.

இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வே. தில்லைநாதன் அவர்கள் மக்களின் முன்னேற்ற வாழ்வுக்கு சேமிப்பின் அவசியத்தை சிறப்பாக விளக்கிக் கூறினார்.

மன்னார் ஆயர் அவர்கள் வன்செயலில் நம்பிக்கையை இழந்து உளமாற்றம் அடையுமாறு கேட்டுக்கொண்டார்.

— ஜெயாபாலாஜி—
முருங்கன்.

நுவரெலியாவிற்கு ...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மூன்று வட்டாரங்களிலிருந்தும் பலர் பங்குபற்றினர். மறையாசிரியர் பரீட்சையினில் நுவரெலியா பிலிப் பூல் பங்கைச் சேர்ந்த செல்வி. மெர்லின் R. M. பிள்ளை அவர்கள் அனைத்து பரீட்சார்த்திகளையும் விட மிகவும் சிறப்பாகவும், முதன்மையாகவும் புள்ளிகள் பெற்றுள்ளார். இவருக்கு ஆயரினால் பணமும், பரிசும், நற்சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

தகவல்: றெஜி ஜோசப்

குடியாட்சிக்கு .....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் குடியாட்சி உரிமைக்கு ஆபத்து தோன்றும் நிலை ஏற்பட்டிருப்பதால் வெரித்தாஸ் தொடர்ந்து செயற்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது என்று மணிலாப் பேராயர் தெரிவித்துள்ளார்.

சூசைப்பிள்ளை சிசிலியாப்பிள்ளை
(இரட்டணமுத்து)

மலர்வு: 11-02-1911
உதிர்வு: 10-02-1990

"நீர் என்மேல் ஈசோப் புல்லினால் தெளித்தருள்வீர், நான் சுத்தமாவேன்."

இவரின் ஆன்மசாந்திக்காக 12-03-1990 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

3-ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. A/48

உன்னைமீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்